DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.44/2024**
Prosecution witness **PW.3 (LW2)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Karthik | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : | | |

**(A1 to A3 personal appeared dispensed by Hon'ble High Court. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **03.11.2025**

**03.11.2025 முதல் விசாரணை** :

1. நான் குன்னூர் விபி தெருவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கிஷோர் எனது நண்பர் ஆவார். இவ்வழக்கின் விவரம் எனக்கு தெரியும்.

2. 31.03.2015 ம் தேதி மாலை 6 மணிக்கு திராவிடர் கழகம் சார்பாக சேலாஸில் பொதுகூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த பொதுகூட்டத்திற்கு நானும் சென்றிருந்தேன். அந்த பொதுகூட்டத்தில் 1 ம் எதிரி துரை சந்திரசேகர் என்பவர் மேடையில் கோவில் கும்பாபிஷேகங்களில் பங்கேற்கக்கூடிய ஐயர்கள் பொதுவாக 4 அல்லது 5 மணி நேரம் மேலே நிற்பார்கள் என்றும், அந்த நேரத்தில் அவர்களுக்கு சிறுநீர் வந்துவிடும் என்றும், அந்த சிறுநீர் கீழே போவது தெரியாமல் இருப்பதற்காக அவர்கள் கையிலிருக்கும் கலசத்தில் இருக்கும் நீரை கோபுர கலசத்தில் ஊற்றி விடுவார்கள் என்றும், அப்போது சிறுநீரும் சேர்ந்து செல்லும் என்றும், இதைத்தான் பகுத்தறிவு இல்லாத இந்துக்கள் தீர்த்தம் என்று நினைத்து குடிப்பதாவும் பேசினார்.

3. அப்போது அவருடன் மேடையில் அமர்ந்திருந்த 2 ம் எதிரி நாகேந்திரன், 3 ம் எதிரி கருணாகரன் மற்றும் பெயர் தெரியாத சிலர் அவர் பேசியது குறித்து

எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்காமல் இருந்தார்கள். அப்போது பொதுமக்கள் சிலர் இதை கேட்க வேண்டுமென்று ஒருபுறமிருந்து எதிர்ப்பு தெரிவித்தார்கள். அப்போது அ.சா.1 கிஷோர் பேசிக்கொண்டிருந்த நபரிடம் அவ்வாறு பேசக்கூடாது என்று பொதுவாக கேட்டார். அப்போது 2ம் எதிரி நாகேந்திரன், 3ம் எதிரி கருணாகரன் ஆகியோர் ஒரு கட்டையை எடுத்து வந்து கிஷோரின் வலது தோள்பட்டையில் அடித்துவிட்டார்கள். அதில் கிஷோருக்கு காயம் ஏற்பட்டது.

4. தடுக்க சென்ற என்னையும் நாகேந்திரன் வலது தோள்பட்டையில் அடித்துவிட்டார். நான் கிஷோரை காப்பாற்றி குன்னூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். எதிரிகள் குற்றச்சம்பவத்திற்கு பயன்படுத்திய கட்டையை தற்போது பார்த்தாலும் என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 மரக்கட்டை தான் அது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> :–

1. அந்த பொதுகூட்டம் நடப்பது தெரிந்து தான் நாங்கள் அங்கே சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் சுமார் நாலு பேர் அந்த பொதுகூட்டத்திற்கு சென்றிருந்தோம். என்னுடன் அ.சா.1 கிஷோர், 3வது பட்டியல் சாட்சி ராமதாஸ் மற்றும் பெயர் தெரியாது ஒருவரும் சென்றோம். அந்த பொதுகூட்டம் நடந்த இடத்தில் நிறைய கடைகள் உள்ளது என்றும், மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்றால் சரிதான். அந்த பகுதியில் இந்து மதத்தை சேர்ந்தவர்கள் தான் அதிகம் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

2. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை சம்பவத்திற்கு மறுநாள் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் தற்போது முதல் விசாரணையில் சொன்னது போல் தான் சொன்னேனா என்றால் ஆம். போலிசார் விசாரணையின் போது 2ம் எதிரி என்னை அடித்ததாக சொல்லியுள்ளேனா என்றால் ஆம், சொல்லியுள்ளேன்.

3. நானும் சாட்சி கிஷோர் மற்றும் ராமதாஸ் ஆகியோர் இந்து முன்னணி உறுப்பினார்கள் என்றால் சம்பவ சமயத்தில் இந்து முன்னணியில் தான் இருந்தோம். நான் சொல்வது போல் அன்றைய தினம் இந்து மதத்தை அவமதிக்கும் விதமாக யாரும் பேசவில்லை என்றும், எங்களது மேல் இடத்தில் அறிவுறுத்தியதன் பேரில் கிஷோர் பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. போலிஸ் விசாரணையில் கிஷோர் மேடையின் மீது ஏறும் போது தள்ளுமுள்ளு நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கட்டையால் எதிரிகள் கிஷோரை தாக்கியதால் அவருக்கு காயம் ஏற்பட்டதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

4. அந்த பொதுகூட்டத்திற்கு போலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். போலிசார் முன்னிலையில் எதிரிகள் எங்களை தாக்கியதாக சொல்வது பொய் என்றும், கிஷோர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/–
Abdul Salam
Judicial Magistrate,
Coonoor